www.tamilarangam.net

# தமிழ் ஈழ விடுதலை இயக்கம்
## Thamil Eelam Liberation Organization

TELO

# அராஜக கும்பல்களை வெளியேற்றுவோம்

தமிழீழத் தேசிய விடுதலைப் போராட்டத்தில் ஸ்தாபன மோதல்களை வன்மையாக கண்டித்து வந்த நாம், ஸ்தாபனங்களின் ஐக்கியத்திற்காக முன்னின்றும் செயலாற்றி வந்தோம். அவ்வாறு செயற்பட்டு வந்ததன் விளைவே ஈழத் தேசிய விடுதலை முன்னணியாகும். மிகக் குறைந்த பட்ச நிபந்தனைகளுடன் உருவான ஈழத் தேசிய விநதலை முன்னணியின் மோதல்கள் உருவானதும், அவை உடனடியாக நிவர்த்தி செய்யப்பட்டதும் மக்கள் அறிந்தவை.

எனவே தான் எம் ஸ்தாபனத்திற்குள் ஏற்பட்ட குழப்ப நிலைகளையும் மக்கள் முன் வைக்க எண்ணியுள்ளோம். சில தனி நபர்களினதும், குட்டி முதலாளிகளினதும் மார்க்ஸிஸ வாதிகள் எனக் கூறிக் கொள்ளும் சிவம், சிவராஜா, ரத்தினம் போன்றோரினதும் தவறான பாதைக்கு எமது தோழர் தாஸ் இட்டுச் செல்லப்பட்டிருந்தார். அவர்களின் ஆலோசனைப்படி 1984ம் ஆண்டு பங்குனி மாதம் முதல் தொடர்ச்சியாக பல கொள்ளைகள், கொலைகள் தாஸ் குழுவினரால் மேற் கொள்ளப்பட்டன இக் கொள்ளைகள் அவர்களின் சுக போக வாழ்விற்காகவும் எம் ஸ்தாபனத்தின் பேரில் களங்கத்தை ஏற்படுத்தவுமே மேற் கொள்ளப்பட்டன. அவற்றில் சில:

(1) தொடர்ச்சியான ஏழு சாராய லொறிக் கொள்ளைகள்.

(2) யாழ் கூட்டுறவு சிகரட் வான் கொள்ளை.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

(3) லொறிகளில் வந்த உணவுப் பொருட்கள் கொள்ளை.

(4) கொக்குவில் பல் தொழில் நுட்பக் கல்லூரியில் லேத் இயந்திரம் கொள்ளை

(5) சுழிபுரம் ராஜசுந்தரம் கொலை

(6) மல்லாகம் தேசிகநாதன் கொலை

(7) கிளிநொச்சி B.M.C ஊழியர் கொலை

(8) கல்வியங் காடு ரஜனி கொலை

(9) S.V.M சீனி லொறி இரண்டு கொள்ளைகள்.

(10) பல பெற்றோல், டீசல் லொறிகள் கொள்ளைகள்.

(11) சிவகடாச்சம், செல்லப்பாவின் மருமகன் சிறி ஆகியோரை கடத்தி பணம் பறித்தமை. இவை போன்று இன்னும் பல......

இவ்வாறான சம்பவங்கள் ஸ்தாபன கட்டுப்பாட்டை மீறிய இவர்களால் நடாத்தப்பட்டது. இவை நடைபெற்றும் இவர்களை எம் கட்டுப் பாட்டிற்குள் உட் படுத்தி திருத்த முடியும் என எதிர் பார்த்தோம் எனவே தான் தொடர்ச்சியாக 2 மாதங்களுக்கு மேலாக இவர்களுடன் பேச்சு வார்த்தையில் ஈடு பட்டோம். ஆனால் அண்மைக் காலமாக பேச முற்பட்ட போதெல்லாம் எம்மை அலட்சியப்படுத்தி வந்துள்ளனர்.

இறுதியாக 11-3-85 அன்று காலை 11 பேருடன் ஜீப்பில் வந்த தாஸ் குழுவினர் தவறுதலாக கிரினேற் வெடித்து காயமுற்றிருந்த எம் முக்கிய தோழருக்கு பாதுகாப்பாக நின்ற எமது தோழருடன் முரண்பட்டதால் யாழ் ஆஸ்பத்திரி வளவிற்குள்ளேயே தாஸ்மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ள வேண்டிய சூழ் நிலை ஏற்பட்டது. வெடிச் சத்தத்தை தொடர்ந்தே, ஆஸ்பத்திரி வளவிற்கு வெளியே ஆயுதங்களுடன், காயமுற்ற நபரிற்கு பாதுகாப்பிற்கென நின்ற எமது தோழர்கள் வளவிற்குள் உட் புகுந்து தொடர்ந்து அவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ள வேண்டிய நிலைமை ஏற்பட்டது. இதனால் பிரச்சினைப்பட்ட தாஸ் குழுவினர் எம்மால் கொலை செய்யப்பட்டதுடன் அவர்களின் ஆயுதங்களும் பறிமுதல் செய்யப்பட்டது.

அச்சமயம் குறுக்கிட்டதினால் தவறுதலாகச் சுடப்பட்டு மரணமடைந்த நீதவான் V P சுந்தரலிங்கத்திற்கும் காயமடைந்தவர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களை மனவருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

தேசிய விடுதலைப் போராட்டத்தில் இவ்வாறான அராஜக கும்பல்கள் தம்மை புரட்சிகர சக்திகளாக இனங்காட்டிக் கொண்டே இணைந்து கொள்வர். ஆனால் இவர்களின் அராஜக நடவடிக்கைளுக்கு எதிராக புரட்சிகர சக்திகள் போராட முற்படுகையில், அராஜக வாதிகள் தமக்கென குழுக்களை அமைத்து தம் சுய தேவைகளைப் பூர்த்தி செய்த 'வண்ணம்' அப்பட்டமான பிற்போக்குத் தனத்தை மூடி மறைப்பதற்காக தாம் வளர்ந்த ஸ்தாபனத்திற்கெதிராக போலித்தனமான குற்றச்சாட்டுக்களையும் முன் வைப்பர்.

அராஜகவாதிகளை இனங்கண்டு வெளியேறுவதன் மூலமே. தேசிய விடுதலைப் போராட்டத்தை செவ்வனே நடாத்த முடியும். எனவே மக்கள் இவ்வாறான அராஜகவாதிகளை வெளியேற்றும் எமது முயற்சியில் பூரண ஒத்துழைப்பு நல்குவார்கள் என எதிர்பார்க்கின்றோம்

எம்முடன் சிற்சில சமயங்களில் தோளோடு தோள் நின்று ஒத்துழைத்தும் அதன் மூலம் புரட்சிகர சக்திகளாக தம்மை இனங்காட்டிக் கொண்ட இவ் அராஜகவாதிகள் மரணிப்பதை நாம் விரும்பவில்லை. அராஜகவாதிகளை மக்களை மத்தியில் இனம்காட்டி விமர்சிப்பதன் மூலமே அன்னியப்படுத்த முடியும் ஆனாலும் இவர்கள் புதிய நிலையில் நடந்து கொண்ட முறையினால் காரணமாகவே இவர்கள் மீது நாம் நடவடிக்கை எடுக்க வேண்டி ஏற்பட்டது.

## சிந்திப்போம்! விமர்சிப்போம்! செயலாற்றுவோம்!

அரசியற் பிரிவு

**தமிழ் ஈழ விடுதலை இயக்கம்**

---

இப் பிரசுரம் 12-3-1886 அன்று தமிழ் ஈழ விடுதலை இயக்கப் பிரச்சார பிரிவினரால் விநியோகம் செய்யப்பட்டது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net 17-3-86

தோழர் தாசுக்கு தண்டனை வழங்க நீங்கள் அத்தனை பேரும் உத்தமர் தானா சொல்லுங்கள்.

அராஜகவாதி ஸ்ரீ சபாரத்தினத்தின் தலைமையிலான தமிழீழ விடுதலை இயக்கத்தில் இன்று வரை நடந்த காட்டுமிராண்டித்தனமான மறைபடிந்த நிகழ்ச்சிகளில் கொலை, கொள்ளை, ஆட்கடத்தல் போன்றவற்றில் எம்மால் நிரூபிக்கக்கூடியவற்றை மட்டும் மக்கள் முன் சமர்ப்பிக்கின்றோம்.

*தனி நபரை அழிப்பதன் மூலம் பொதுவிடுதலையை அடைய முடியாது. ஆலாலசுந்தரம், தர்மலிங்கம் போன்ற முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் கொலை.
*தெல்லிப்பளை துர்க்கை அம்மன் கோயில் கொள்ளை. இந்தக் கொள்ளையை மறைக்க இதை நேரில் கண்ட ஏழாலை வாசியான சின்னவன் என்பவர் அடித்துக்கொலை.
*வரலாற்றுப்பிரசித்தி பெற்ற திருக்கேதீஸ்வரக்கோயில் கொள்ளை. மேலும் கோயில் நிர்வாகத்தைச் சேர்ந்த புலவர் என்பவர் அடித்து துன்புறுத்தப்பட்டார். இக்கொள்ளை சிறிலங்கா இராணுவம் என்ற போர்வையில் நடத்தப்பட்டது.
*சுழிபுரம் துரையப்பா கடையும் வீடும் கொள்ளை.
*யாழ்ப்பாணத்தில் ஒரே இரவில் லலிதா நகை மாளிகை, அம்பலவாணர் நகை மாளிகை, மகாலட்சுமி நகை மாளிகை என்ற மூன்று நகை மாளிகைகள் கொள்ளை.
*காரைநகரில் இரண்டு வீடுகள் கொள்ளை. ஒரு வீட்டுக்காரரைத் தாக்கி கிணற்றுக்குள் போடப்பட்டு கொள்ளையடிக்கப்பட்டது. எனினும் கிணற்றுக்குள் தள்ளப்பட்டவர் உயிர் தப்பியுள்ளார்.
*கோண்டாவில் இ.போ.ச பொறியியலாளர் வீட்டில் கொள்ளையிட முற்பட்டபோது அவர் விழித்துக் கொண்டதால் அங்கிருந்து தப்பிஓட்டம்.
*சாவகச்சேரி சின்னத்தம்பி அன் கோ உரிமையாளர் வீட்டில் கொள்ளையடித்ததுடன் அங்கிருந்த பெண்ணுடன் தகாத முறையில் நடந்தனர்.
*"புறவுண் ரோட்டில் உள்ள இலங்கை மின்சார சபைக் காரியாலயத்தில் இருந்த 1½ இலட்சம் ரூபா பெறுமதியான ரான்ஸ்போமர் கொள்ளை. ரான்ஸ்போமரில் இருந்த உலோகப்பொருட்களை பெருமாள் கோயிலில் உள்ள நாடார் ஒருவருக்கு 15,000 ரூபாவிற்கு விற்கப்பட்டது.
*கல்வியங்காடு நீதவான் அமிர்தலிங்கம் வீட்டில் கொள்ளையடித்ததோடு அவரும் கொலைசெய்யப்பட்டார்.
*சிறுப்பிட்டி பப்பன் கடையில் கன்டோஸ், இனிப்பு வகை, றேடியோ, பெருந்தொகையான பணம் கொள்ளை
*சிறுப்பிட்டியில் டெலோவால் ஒரு பொதுமகன் தாக்கப்பட்டதையடுத்து இதை எதிர்த்து சிறுப்பிட்டி மக்கள் நடத்திய ஊர்வலத்தின் மீது வாகனத்தால் மோதியும், இரும்புக்கம்பிகள், தடிகள் போன்றவற்றால் தாக்கியும் உள்ளனர்.

மேலே குறிப்பிட்ட சம்பவங்கள் எமக்குள்ளே முரண்பாடு ஏற்பட்ட காலத்திலேயே நடைபெற்றது. இச்சம்பவங்களில் ஈடுபடுத்தப்பட்ட தோழர்கள் பலர் பலாத்காரமாகவே ஈடுபடுத்தப்பட்டனர். அவர்கள் பின் உண்மையை உணர்ந்து தெரிவித்த தகவல்களையும் பாதிக்கப்பட்டவர்களை நேரில் சென்று விசாரித்த போது எடுத்த தகவல்களையும் கொண்டே இவற்றை நாம் பிரசுரிக்கின்றோம். இதன் மூலம் இவர்கள் மக்களுக்கு என்ன சேவை செய்கின்றார்கள் என்பதை நாம் சொல்லாமலே புரியும்.

(மேற்கண்ட அறிக்கை தாஸ் கோஸ்டியினரால் வெளியிடப்பட்டுள்ளது)

-தாஸின் கொள்கையை
ஏற்கும் போராளிகள்-

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எம்மைக் காப்பாற்றுங்கள்.12.03.86 நல்லூரில் ஏற்பட்ட அசம்பாவிதங்களில் கொல்லப்பட்ட மூவரும் அப்பாவிகளே.இவர்களின் மரணம் தவிர்க்கப்பட வேண்டிய ஒன்று.ஆனாலும் இவர்கள் நடத்திய ஊர்வலத்தில் கொள்ளையர்கள்,கொலைஞர்கள் சிலரை கலந்து கொள்ள அனுமதித்ததின் விளைவே இப்படுகொலைகள்.தமக்குப் பாதுகாப்பாக மக்கள் திரளை வைத்த வண்ணம் குறித்த ஒரு இயக்கத்தினர்மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதே இந்த விளைவு.எதுவாக இருப்பினும் கண்டிக்கப்பட வேண்டியவையே.நிலைமை இவ்வாறு இருக்க இன்று குறித்த பகுதி மக்கள் ஊர்வலம் நடத்தியதன் நோக்கம் என்ன?தொடர்ச்சியாக பல கொள்ளைகள்,கொலைகள் நடத்திவந்த தாஸ் குழுவினரின் விடுதலைக்கான ஊர்வலம் என்பதை ஏற்றுக் கொள்ள முடியாது.தாஸ் குழுவினரை ஏதாவது வகையில் அடக்குவதன் மூலம் தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தினர் தம்மைத் தொடர்ச்சியான கொள்ளைகள்,கொலைகளிலிருந்து பாதுகாத்தது எவ்வகையில் தவறு ஆகும்?மான்டாவில் அப்பாவிப் பொதுமக்கள் படுபயங்கரமாக தாக்கப்பட்டு மந்திகையில் இருந்ததை மறந்திருக்க மாட்டார்கள்.வல்வெட்டித்துறை மக்கள் கொலையுண்டதையும் மறக்க முடியாது.இவற்றைச் செய்திருக்கும் தாஸ் குழுவினர் மன்னிக்கப்பட வேண்டியவர்கள்தானா?அல்லது விடுதலை செய்யப்பட வேண்டியவர்களா?

தமிழ் ஈழ விடுதலை இயக்கம்

(ரெலோ)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்